Registered as a News Paper    பக்கங்கள் 4    விலை ரூபா: 5-00

யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    மாசி 26    [09 - 3 - 1993]    செவ்வாய்க்கிழமை    ஓசை 19

## யாழ்-வன்னி தந்திச்சேவை விரைவில் ஆரம்பிக்க திட்டம்

யாழ்-வன்னி தந்திச் சேவையொன்றினை விரைவில் ஆரம்பிக்க போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் எண்ணியுள்ளனர். தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு பொதுமக்களிற்கான தந்திச்சேவையொன்றை ஆரம்பிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இச்சேவை யாழ்-வன்னி தொடர்புக்கு மட்டுமே செயற்படுவதாக அமையும். இவ்வாறான சேவையின் தேவைபற்றிய அபிப்பிராயங்களையும், எவ்வாறு செயற்படவேண்டும் (4 ஆம் பக்கம் பார்க்க)



அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு நேற்று விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பினரால் ஒழுங்கு செய்யப்பட்ட ஊர்வலத்தில்வந்த ஊர்திகளில் ஒன்று.



அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்ட மக்களில் ஒரு பகுதியினர்.

# மகளிர் தின எழுச்சிப் பேரணியில் பல்லாயிரம்மக்கள்திரண்டுவந்தனர்

## மீட்புநிதி சேகரிப்பு நேர அட்டவணை

எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறுவதாக இருந்த மீட்பு நிதி சேகரிப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் அத்தினத்தில் நடைபெற மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிமுதல் 10.00 மணிவரை நல்லூர்மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் மீட்பு நிதி சேகரிப்பு இடம்பெறவுள்ளது மீட்பு நிதி செலுத்தவிரும்பும் சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களும் குறித்த இந்த நேரத்தில் தமது மீட்புநிதியினைச் செலுத்தமுடியும்.

இதேவேளை எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை பின் (4 ஆம் பக்கம் பார்க்க)

### மூத்ததளபதி கிட்டு பயணம் செய்த

## கப்பலை வழிமறித்தமை ஐ. நா. சாசனத்துக்கு முரண்

## பதாகைகளைத் தாங்கியவாறு எழுச்சிக்கோஷம் எழுப்பினர்

[யாழ்ப்பாணம்]

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தமிழீழ விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த மாபெரும் எழுச்சிப்பேரணியிலும், பொதுக்கூட்டத்திலும் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். இப்பேரணி நூற்றுக்கணக்கான ஊர்திகளு

எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறுவதாக இருந்த மீட்பு நிதி சேகரிப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் அத்தினத்தில் நடைபெற மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிமுதல் 10.00 மணிவரை நல்லூர்மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் மீட்பு நிதி சேகரிப்பு இடம் பெறவுள்ளது மீட்பு நிதி செலுத்தவிரும்பும் சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களும் குறித்த இந்த நேரத்தில் தமது மீட்புநிதியினைச் செலுத்தமுடியும்.

இதேவேளை எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை பின்

(4ஆம் பக்கம் பார்க்க)

# பல்லாயிரம்மக்கள்திரண்டுவந்தனர்

### மூத்ததளபதி கிட்டு பயணம் செய்த

# கப்பலை வழிமறித்தமை

# ஐ. நா. சாசனத்துக்கு முரண்

### அமெரிக்க வழக்கறிஞர் கருத்து

தளபதி கிட்டு பயணம் செய்த கப்பலை இந்தியப் படையினர் வழி மறித்த செயல் சட்டவிரோதமானது என்று அமெரிக்க வழக்கறிஞர் கியோனாகா கூறியுள்ளார்.

சென்னையில் அவர் இது தொடர்பாக மேலும் கூறுகையில்; இந்திய அரசின் செயற்பாடானது கடல் சாசனம் தொடர்பான 1982ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் சட்டத்தின் 110-வது சரத்தை மீறுவதாக இருக்கிறது எனக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், சிங்கப்பூரில் பதிவு செய்யப்பட்ட எம். வி. அகத். கப்பல் சர்வதேச கடல் பரப்பிலேயே நின்றது. அடிமைத்தனமான காரியத்தில், அல்லது கடற்கொள்ளையில் அல்லது அதிகாரமளிக்கப்படாத ஒலி பரப்பில் அக் கப்பல் ஈடுபட்டிருந்தால் மாத்திரமே இந்தியப் போர்க் கப்பல் அதனைத் தடுக்க முடியும். அகத் அத்தகைய செயல்கள் எதிலும் ஈடுபடவில்லை. அத்துடன் கப்பலில் இருந்தோர் தடுத்து வைக்கப்பட்டிருப்பதும் கூட சர்வதேச சட்டத்தை மீறுவதாகவே உள்ளது. ஏனெனில் கப்பல் பணியாளர்கள் இந்தியர்களும் அல்ல. அவர்கள் வழி மறிக்கப்பட்ட சமயத்தில் இந்தியப் பிராந்தியத்தில் இருக்கவும் இல்லை எனவும் தெரிவித்தார்.

### கப்பல் கப்டனின் சார்பில்ஆஜராக

# அமெரிக்கவழக்கறிஞருக்கு

# அனுமதி மறுக்கப்பட்டது

(சென்னை)

வங்கக் கடலில் வழிமறிக்கப்பட்டு சென்னைத் துறைமுகத்திற்கு இழுத்துச் செல்லப்பட்ட எம். வி அகத் கப்பலில் பயணம் செய்த மாலுமிகள் சார்பாக ஆஜராவதற்கென சென்னைக்கு வந்த அமெரிக்க வழக்கறிஞரான ஜோன் சி. கியோனாகாவிற்குசென்னை நீதி மன்றம் அனுமதி மறுத்துள்ளது.

இந்திய வக்கீல்கள்சங்கத்தில் கியோனாகா தன்னைப் பதிவு செய்து கொள்ளாமையே அவருக்கு அனுமதி மறுக்கப்படுவதற்கான காரணம் என்று சென்னை மேல்நீதிமன்ற நீதிபதிகளான கே.வெங்கடசாமி, கே. சாமிதுரை ஆகியோர் தெரிவித்துள்ளனர். எனினும், தடுத்து வைக்கப்பட்ட ஒன்பது பேரையும் சிறைச்சாலை சென்று சந்திப்பதற்கு வழக்கறிஞர் கியோனாகாவிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

'அகத்' கப்பல் தடுத்துநிறுத்தப்பட்டதையடுத்து தளபதி கிட்டுவை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய வேண்டுமெனக் கோரி தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பா. நெடுமாறன் நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தது தெரிந்ததே. இந்த மனுவிற்கு பதிலளித்த இந்திய அரசு, கிட்டு கப்பலில் வந்ததே தமக்குத் தெரியாது எனக் கூறியிருந்ததும் தெரிந்ததே. இதையடுத்து கைது செய்யப்பட்டிருக்கும் ஏனையவர்கள் தொடர்பாகவும், அவர்களை சந்தித்துப் பேச அனுமதி அளிக்கப்பட வேண்டுமெனவும் கோரி மற்றொரு மனு நெடுமாறனால் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு மீதான விசாரணை நடைபெற்ற போதே கப்பலின் கப்டன் எனக் கூறப்படும் ஜெயச்சந்திரன் சார்பாக ஆஜராக முன்வந்த அமெரிக்க வழக்கறிஞருக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது

(4ஆம் பக்கம் பார்க்க)

**உளவாளிகள் !!!**

**அவதானமாக இருக்கவும்...!**

எந்த ஒரு புதியவரையும் எடைபோட்டு, சந்தேகம் வலுத்தால் புலிகளிடம் கூறுவோம்

### பதாகைகளைத் தாங்கியவாறு

# எழுச்சிக்கோஷம் எழுப்பினர்

[யாழ்ப்பாணம்]

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தமிழீழ விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த மாபெரும் எழுச்சிப்பேரணியிலும், பொதுக்கூட்டத்திலும் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். இப்பேரணி நூற்றுக்கணக்கான ஊர்திகளுடனும், பல்வேறு அணிநடைகளுடனும் இடம் பெற்றமை அதன் சிறப்பம்சமாக இருந்தது.

நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் கோண்டாவில் சந்தியிலிருந்து பலாலி வீதி வழியாக யாழ். பல்கலைக்கழகம் வரை எழுச்சிப் பேரணி நடைபெற்றது. இப்பேரணியில் நூற்றுக்கும் மேற்பட்ட அலங்கார ஊர்திகளும் எடுத்துவரப்பட்டன. பெண் ஒடுக்குமுறை, பெண் எழுச்சி என்பவற்றை அவை சித்திரிப்பதாக அமைந்திருந்தன.

இவ்வெழுச்சிப் பேரணிக்கு முன்னே மகளிர் படையணி, கடற்புலிகள் மகளிர் படைப் பிரிவு, தமிழீழ காவல்துறை பெண்கள் அணி, விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க பாண்ட் குழு, பாடசாலை மாணவிகள் பாண்ட் குழு ஆகியன அணியணியாக வந்தன.

இப்பேரணியில்மிகப் பெருமளவு பெண்கள்கலந்துகொண்டனர். பேரணி இரண்டு மைல் நீளம் கொண்டதாகஇருந்தது. பிற்பகல் 4 மணியளவில்

(4ஆம் பக்கம் பார்க்க)

### வீரச்சாவு



வீரவேங்கை ஈசன்

நேற்று முன்தினம் யாழ். மாவட்டத்தில் இடம் பெற்ற வெடிவிபத்தில் வீரவேங்கை ஈசன் [செல்வராசா சிவநேசன் தனங்கிளப்பு, சாவகச்சேரி] வீரச்சாவு அடைந்தார். இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

★

லெப்டினன்ட் ரெஜி
ஆதரவாளர் திலீபன்

[வவுனியா]

ஓமந்தைப் பகுதியைச் சேர்ந்தவண்ணான்குளம் காட்டுப்பகுதியில் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச்சூட்டிற்கு அப் பகுதியில் சென்றுகொண்டிருந்த விடுதலைப்புலிகள் போராளி ஒருவரும் ஆதரவாளர் ஒருவரும் வீரச்சாவு அடைந்தனர்.

நேற்றுப்பகல் 12. 10 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் லெப்டினன்ட் ரெஜி [கருப்பையா கிருஷ்ணமூர்த்தி கட்டையடம்பன், மன்னார்], ஆதரவாளர் தங்கராசா

(4ஆம் பக்கம் பார்க்க)

# செட்டிகுளம் பிரதேசத்தில்

# பாரிய நடவடிக்கை ஆரம்பம்

### காலவரையற்ற ஊரடங்கும் அமுல்

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் காலவரையறையற்ற ஊரடங்குச் சட்டத்தை அமுல் செய்துள்ள சிறிலங்கா இராணுவம் இம் மாவட்டங்களின் எல்லைப் பகுதியில் நேற்று இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

செட்டிகுளம் பகுதியில் உள்ள இராணுவத்தினரே இந்நடவடிக்கையை மேற்கொள்வதாகவும் நூற்றுக் கணக்கான படையினர் இதில் ஈடுபட்டுள்ளதாகவும் இராணுவ அதிகாரி ஒருவர் குறிப்பிட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன

படையினருக்கு உதவியாக விமானப்படை விமானங்களும், டாங்கிகளும் தாக்குதலில் ஈடுபடுவதாக தெரிவிக்கப்பட்ட போதிலும், விமானங்கள் தாக்குதலில் பங்கு பற்றவில்லை. எனினும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக இராணுவ அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்

எனினும் விமானப்படை விமானங்கள் வவுனியா விமான தளத்திலிருந்து அடிக்கடி பறந்து சென்றதாக அவ்வூர் வாசிகள் தெரிவித்ததாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

# இராணுவப் பிடியிலிருந்த

# 61 பொதுமக்கள் விடுதலை

(வடமராட்சி)

பலாலி, இளவாலைப் பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினரின் பிடியில் சிக்குண்டிருந்தோரில் 61 பேர் நேற்று 'குமண' கப்பல் மூலம் பருத்தித்துறை துறைமுகத்தை வந்து சேர்ந்தனர்.

பலாலி இராணுவ முகாமிலிருந்து 21 பேரும், இளவாலை, மாதகல், பன்னாலை, அளவெட்டிப் பகுதிகளிலிருந்து 40 பேரும் வந்தனர்.

பலாலியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் அனேகமானோர் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்தவர்களும் கடலில் வைத்து கைது செய்யப்பட்டவர்களுமாவர். மற்றும் பகுதிகளில் இருந்து வந்தவர்களில் அனேகமானோர் பல்வேறு நோய்களுக்கு உள்ளானவர்களுமாவர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் அனுசரணையுடன் இவர்கள் கூட்டி வரப்பட்டு வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் பருத்தித்துறையில் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். மற்றையோர் செஞ்சிலுவைச் சங்க வாகனங்களில் யாழ். கூட்டிவரப்பட்டனர்.

பலாலியிலிருந்து விடுவிக்கப்பட்டோர் விபரம் பின்வருமாறு; மகாலிங்கம் - லக்ஷ்மி

(3ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாம்

எம்மிடம் றேடியோ, மணிக்கூடு திருத்தும் வாடிக்கையாளர்கட்கு மூன்று (3) அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாமாக வழங்கப்படும். டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமை) யாழ்ப்பாணம். கிளை: இலங்கை வங்கி அருகாமை, சாவகச்சேரி (எலெக்ரோனிக் ஓட்டோமற்றிக் கடிகாரங்கள் திருத்துவதில் கைதேர்ந்தவர்கள். (சி-6063)

### சோதிடம்

ஜாதகம் எழுத, பலனறிய, அதிர்ஷ்ட எண்களில் பெயர் வைக்க, விவாகப்பொருத்தம் பார்க்க வேலணை சோதிடர் V.A. சிவராசா 152B, அரசடி றோட், கந்தர்மடம் யாழ்ப்பாணம். (4425)

### தடுப்பு ஊசி

மானிப்பாய் சுகாதாரவைத்திய அதிகாரி பிரிவில் வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்வராது தடுப்பு ஊசிபோடும் திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இப்பகுதிச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவு ரீதியாக இந்த தடுப்பு ஊசிமருந்து சகல கிராமங்களிலும் போடப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

### சேவை மூப்பு அடிப்படையில் நியமனம் வேண்டும்

அரசாங்க பொதுச்சேவைத் தொழிலாளர் சங்கத்தின் யாழ் கிளை பொது நிர்வாக அமைச்சிலும், மாகாண சபைகளிலும் காலியான இடங்களை நிரப்புவதற்கு அலுவலக ஊழியர்களில் தகைமையுடையவர்களுக்குமூப்பு அடிப்படையில் பதவி உயர்வுகளை வழங்குமாறு யாழ் அரசாங்க அதிபரிடம் மகஜர் மூலம் கோரியுள்ளது. (24)

### வகுப்புகள் ஆண்டு 9-11

வரலாறு சமூகக்கல்விக்குமான பிரத்தியேக தொடர் வகுப்புகள் (மார்ச் - யூலை) (செப்ரம்பர் - நவம்பர்) ஆரம்பமாகவுள்ளன. மாணவர்கள் நிலைக்கேற்ப விடைகள் எழுதுவித்துப் பயிற்சியளிக்கப்படும். விபரங்கட்கு, நா. மயில்வாகனம் 36 வைமன்வீதி, நல்லூர் 10-3-93, 11-3-93 திகதிகளில் பி.ப 3-5 தொடர்பு கொள்ளலாம். (4429)

### வரலாறு ஆண்டு 9,11

வினா-விடை நூல்கள் விற்பனையாகிறது. தவணைப் பரீட்சைகளுக்கேற்றது புத்தகசாலைகளில் பெறலாம். ஆக்கம் நா. மயில்வாகனம், சென் ஜோன்ஸ் கல்லூரி. (4428)

### அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி வணிக மன்றத்தின் 05-03-93 அன்று நடைபெறவிருந்த அதிர்ஷ்டலாபசீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர் வரும் 25-03-93 அன்று பிற்போடப்பட்டுள்ளது. தொடர்ந்து விற்பனையாகும் சீட்டுக்களும் செல்லுபடியாகும் என்பதை அறியத்தருகிறோம். (4432)

### மா இறக்குதல் தீவிரம்

பருத்தித்துறை இறங்குதுறையில் ஒரே நாளில் மட்டும் 604 மெட்றிக் தொன் மாவை தொழிலாளர்கள் 'குமாரி' கப்பலில் இருந்து இறக்கி ஒரு சாதனையை ஏற்படுத்தியிருக்கின்றனர்.

நான்கு இழுவைப் படகுகளைப் பயன்படுத்தி பதினாறு தடவைகள் மா இறக்கப்பட்டிருக்கின்றன. ஓர் இழுவைப் படகில் மா ஏற்றி இறக்க 24 நிமிடங்கள் எடுத்திருக்கின்றன.

அனைத்து தொழிலாளர்களின் அயராத முயற்சியினாலேயே இதுவரை இல்லாத இச்சாதனை ஏற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (யோ)

## ஸ்ரீதர் திரையரங்கில்...
## "தமிழோசை"

## தொழில் ஊக்குவிப்பிற்கு கடன் உதவி வழங்கப்பட்டது

கெருடாவில் தெற்கு கடற்தொழிலாளர் சங்கத்திற்கு சர்வோதயம், கடற்புலிகள் பொருண்மிய மேம்பாட்டுக் கழக அனுசரணையுடன் கடன் அடிப்படையில் 80 ஆயிரம் பா பணம் வழங்கியுள்ளது.ங்ருகடன் அடிப்படையில் வழகப்பட்ட இப்பணம் வறுமைக் கோட்டிற்கு கீழ்ப்பட்ட 20 பேருக்கு தொழிலை ஊக்குவிக்குமுகமாக வழங்கப்பட்டன. பத்து பேருக்கு 5ஆயிரம் ரூபா வீதமும், பத்துப்பேருக் கு3ஆயிரம் ரூபா வீதமும் வழங்கப்பட்டன. (யோ)

## மாட்டுவண்டி சவாரிப் போட்டி

கோப்பாய் வடக்கு
கோல்ட் ஸ்ரார் விளையாட்டுக்கழக
நிதிக்காக

14-03-93 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 2 மணிக்கு நீர்வேலி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. போட்டியாளர் 12-03-93 க்கு முன் கழக நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும்,

பார்வையாளர் பிரவேசம்: ரூபா 10/-

(4431) —கழக நிர்வாகம்

## 31-ம்நாள் கண்ணீர் அஞ்சலி



(1993.3.9)

மண்ணில்
1960-11-19
விண்ணில்
1993-02-07

### வலோரியான் அமலதாஸ்

''உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்''

அன்புத் தெய்வமே அமலன்
அணையா விளக்கே அமலன்
அற்புத மகனே அமலன்
தேடக் கிடையாத செல்வமே அமலன்]
எங்கள் ஒளி மங்கியதோ?
பெற்றோர் உன் வரவைப்பார்த்திரவே
ஆழ்கடலில் உன் உயிர் போனதையா ... ...
முப்பத்திமூன்று வயதில் அமலன்
எம்மைவிட்டு இறைபதம் சேர்ந்து விட்டாயே ......
உன் ஆன்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

இவரின் பிரிவால் வாடும்
அன்புள்ள பெற்றோர் மனைவி (ராதா)
உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள்

தகவல்:
பெ. மோணிக்கம்மா
இல. 129 கோவில் வீதி,
யாழ்ப்பாணம். (4422)

மண்ணில் மறைந்த எங்கள்
அருமைத் தந்தையின்
2-ம் ஆண்டு நினைவஞ்சலி

### வீடமைப்பு மானியம் வழங்க ஏற்பாடு

(தொல்புரம்)

வீடமைப்புத் திணைக்களத்தின் 15 லட்சம் வீடமைப்பு மானியத்திட்டம் வலிமேற்குப் பகுதிகளிலுள்ள சனசமூக நிலையங்கள் ஊடாக செயல்படுத்தப்படவுள்ளது.

மேற்படி இலவச மானியம் வறுமையிலும் வறுமையான குடும்பங்களுக்கு வீடமைப்பதற்காக வழங்கப்படவுள்ளது.

இதன் பிரகாரம் சுழிபுரம் பிரதேச சபையைச் சார்ந்த ஒவ்வொரு சனசமூக நிலையமும் தமதுபகுதியிலுள்ள ஐந்து வறுமையான குடும்பங்களைத் தெரிவுசெய்து வலிகாமம்மேற்கு சனசமூக நிலையங்களின் உப. சமாசச் செயலாளர் த. விமலரூபன் அவர்களிடம் விபரத்தை ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

### டயஸ் குடியிருப்பில் தீ விபத்து

(யாழ்ப்பாணம்)

தீவக மக்கள் தங்கியிருக்கும் நாவலடி டயஸ் குடியிருப்பில் கடந்த வாரம் கொட்டகை ஒன்று தீப்பற்றி எரிந்தது. 1ஆம் திகதி திங்கட்கிழமை பகல் இக்கொட்டகை தீப்பற்றி எரிந்ததாக கூறப்பட்டது. நீளமாக அமைக்கப்பட்டிருந்த இக்கொட்டகை பத்து பகுதிகளாக (குடிசைகளாக) பிரிக்கப்பட்டு அவற்றில் பதினான்கு குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் வசித்து வந்ததாகவும் இவர்கள் தற்போது பக்கத்து குடிசைகள் உள்ளவர்களுடன் சேர்ந்து வசிப்பதாகவும் கூறப்படுகிறது. தவறுதலாக ஏற்பட்ட தீயினாலேயே மேற்படி கொட்டகை எரிந்ததாக தெரிகிறது. (22)

### மிளகாய் திருட்டு

[தென்மராட்சி]

கைதடிப குதி விவசாயிகளின் தோட்டங்களில் இருந்து இரவு வேளைகளில் மிளகாய் செடிகளில் மிளகாய், மற்றும் பழமிளகாய் போன்றவற்றை கள்வர்கள் அபகரித்துச் செல்வதாக தெரியவருகின்றது. இச்சம்பவம் சென்ற கிழமையில்இருந்து மேற்படி பகுதியில் நடைபெறுவதாக அப்பகுதி விவசாயிகள் கவலையுடன் தெரிவிக்கின்றனர். இதுவரையும் சுமார் இருபத்தையாயிரம் ரூபாபெறுமதியான பச்சை மிளகாய், செத்தல் மிளகாய்களை கள்வர் அபகரித்துச் சென்றதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (86)

### விளையாட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி வடநகர்க் கொத்தனிப் பாடசாலைகளிடையே கடந்த சனிக்கிழமை நடாத்தப்பட்ட கீழ், மேல்,

திருநெல்வேலியில்

யாழ். பல்கலைக் கழக சித்த மருத்துவ
மாணவ மன்ற நிதிக்காக

## நாடகம்

காலம்:- 11. 03. 1993 வியாழக்கிழமை இரவு 6.30 மணி
இடம்:- யாழ். பல்கலைக்கழக மைதானம்

இந்தமண் எங்களின் சொந்தமண் புகழ்
S·G. சாந்தன் அரிச்சந்திரனாகவும்
அரியாலையூர் நடிக கலாமணி
V செல்வம் சந்திரமதியாகவும்
இணைந்து வழங்கும்
அரியாலை "கலைமகள் கலை ஒளி"
நாடக மன்றம் வழங்கும்

## அரிச்சந்திரா மயான காண்டம்

V. G. FARM CENTER & RECORDING CENTER
MANIPAY.
(4426)

## சீட்டிழுப்பு முடிவுகள்

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளன அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு 1993-03-06ந் திகதி காலை யா/இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் பிரதேச உள்ளூராட்சி உதவிஆணையாளர் தலைமையில் அனைத்து சமாசங்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் நடைபெற்றது. பரிசுவழங்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

பரிசுகளுக்குரிய இலக்கங்கள் பின்வருமாறு:-
1-வது ... இல. 5990, 2-வது ... 306
3-வது ... 051 பத்து ஆறுதல் பரிசுகளுக்குரிய இலக்கங்கள்:- 862, 099, 6006, 2844, 238, 1330, 2886, 5483 5958, 1852

08-03-1993 (4430) சம்மேளன நிர்வாகம்

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 16 — 11 — 1959

மறைவு 05 — 03 — 1988

திருமதி அருள்மணி(வதனி) சச்சிதானந்தன்
திதி 09- 03- 93

காலத்தால் அழியாத ஒளி விளக்காய்

சேவை மூப்பு
அடிப்படையில்
நியமனம் வேண்டும்

அரசாங்க பொதுச்சேவைத் தொழிலாளர் சங்கத்தின் யாழ் கிளை பொது நிர்வாக அமைச்சிலும், மாகாண சபைகளிலும் காலியான இடங்களை நிரப்புவதற்கு அலுவலக ஊழியர்களில் தகைமையுடையவர்களுக்குமூப்பு அடிப்படையில் பதவி உயர்வுகளை வழங்குமாறு யாழ் அரசாங்க அதிபரிடம் மகஜர் மூலம் கோரியுள்ளது. (24)

...க்கி ஒரு சாதனையை ஏற்படுத்தியிருக்கின்றனர்.

நான்கு இழுவைப் படகுகளைப் பயன்படுத்தி பதினாறு தடவைகள் மா இறக்கப்பட்டிருக்கின்றன. ஓர் இழுவைப் படகில் மா ஏற்றி இறக்க 24 நிமிடங்கள் எடுத்திருக்கின்றன.

அனைத்து தொழிலாளர்களின் அயராத முயற்சியினாலேயே இதுவரை இல்லாத இச்சாதனை ஏற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(யோ)

## ஸ்ரீநகர் திரையரங்கில்...
## “தமிழோசை”

**தினசரி மாலை**
**4 மணிக்கும் 6 மணிக்கும்**
காண்பிக்கப்படுகிறது. சி-6149

## 31ஆம் நாள்
## நினைவஞ்சலியும்
## நன்றி நவிலலும்
## சபிண்டீகரண அழைப்பும்



தோற்றம்
1920. 03. 30

மறைவு
1993. 02. 07

திருமதி
**செல்வரத்தினம்**
**சங்கரப்பிள்ளை**
திதி: 1993-03-09

எங்கள் குடும்ப விளக்காக இருந்து எம்மை சீர்பெற வழி சமைத்த அன்புத் தெய்வமே உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்

எங்கள் அன்புத்தெய்வத்தின் மரணச்சடங்கில் கலந்து உதவி ஒத்தாசை புரிந்த அனைவருக்கும் எமது இதய பூர்வ நன்றிகள்

இன்று 1993-03-09 இல் எமது இல்லத்தில் நடைபெறும் சபீண்டிகரணக் கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புள்ளங்களை அழைக்கின்றோம்.

எஸ். இந்திரா
(பளை அரசினர் வைத்தியசாலை)
எழுதுமட்டுவாழ். (4400)

பிரிவால் இன்னலுறும்
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

அன்புத் தெய்வமே அமலன்
அணையா விளக்கே அமலன்
அற்புத மகனே அமலன்
தேடக் கிடையாத செல்வமே அமலன்]
எங்கள் ஒளி மங்கியதோ?
பெற்றோர் உன் வரவைப்பார்த்திரவே
ஆழ்கடலில் உன் உயிர் போனதையா ... ...
முப்பத்திமூன்று வயதில் அமலன்
எம்மைவிட்டு இறைபதம் சேர்ந்து விட்டாயே ......
உன் ஆன்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

இவரின் பிரிவால் வாடும்
அன்புள்ள பெற்றோர் மனைவி (ராதா)
உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள்

தகவல்:
பெ. மோணிக்கம்மா
இல. 129 கோவில் வீதி,
யாழ்ப்பாணம். (4422)

மண்ணில் மறைந்த எங்கள்
அருமைத் தந்தையின்

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**திரு. இ. இரகு-நாதன்** அவர்கள்
(இலகுப்பிள்ளை)

மலர்வு
5-3-1926

மறைவு
2-3-1991

திதி 9.3.1993

ஞாலமிதில் நாமுயர நலமே செய்தீர்
ஞாயிறெனத் திங்களென யான்றும் நின்றீர்
காலமெலாம் கருணைமழை பொழிந்தே காத்தீர்
கடமையினில் வழுவாத பண்பைத் தந்தீர்
சீலமுற வாழ்வதற்கோர் சிறப்பை வைத்தீர்
சிந்தையினில் எஃறுமொளி காட்டி வந்தீர்
கோலமுறும் எந்தையுமை பாங்கிற் சென்றீர்
வற்சரமே நிறைவுறக் கண்டஞ்ச லித்தோம்

‘உடையார் வளவு’
புன்னாலைக்கட்டுவன்
9- 3- 1993

அன்பு மனைவி,
மக்கள்.
(4392)

[தென்மராட்சி]

கைதடிப குதி விவசாயிகளின் தோட்டங்களில் இருந்து இரவு வேளைகளில் மிளகாய் செடிகளில் மிளகாய், மற்றும் பழமிளகாய் போன்றவற்றை கள்வர்கள் அபகரித்துச் செல்வதாக தெரியவருகின்றது. இச்சம்பவம் சென்ற கிழமையில்இருந்து மேற்படி பகுதியில் நடைபெறுவதாக அப்பகுதி விவசாயிகள் கவலையுடன் தெரிவிக்கின்றனர். இதுவரையும் சுமார் இருபத்தையாயிரம் ரூபாபெறுமதியான பச்சை மிளகாய், செத்தல் மிளகாய்களை கள்வர் அபகரித்துச் சென்றதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (86)

### விளையாட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி வடநகர்க் கொத்தணிப் பாடசாலைகளிடையே கடந்த சனிக்கிழமை நடாத்தப்பட்ட கீழ், மேல், மத்திய பிரிவு ஆண் பெண்களிற்கான உடற்பயிற்சிப் போட்டிகள் அனைத்திலும் சாவகச்சேரி இந்துக்கல்லூரி முதலாமிடம்பெற்று சாதனை புரிந்துள்ளது.

யாழ். குடாநாட்டில் சகல பிரிவுகளிலும் எல்லாப் பிரிவு உடற்பயிற்சிப் போட்டிகளிலும் முதலிடம் பெற்ற ஒரே பாடசாலை தேசியப் பாடசாலையான சாவகச்சேரி இந்துக் கல்லூரியே என்பது குறிப்பிடத்தக்கது. [மு]

★

[வடமராட்சி கிழக்கு]

மருதங்கேணி இந்து தமிழ் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை வித்தியாலய அதிபர் திரு. பொ. சங்கரப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பிரதம விருந்தினராக, வடமராட்சி கோட்டக் கல்வி அதிகாரி திரு. எஸ். செல்லத்துரையும், கௌரவ விருந்தினராக வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் திரு. கே. கேதீஸ்வரனும் கலந்து கொள்வார்கள். [36]

★

(வடமராட்சி கிழக்கு)

செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டு விழாவில், புனிதசெபஸ்தியார் இல்லம் (மஞ்சள்) முதலாமிடத்தையும், புனித பிலிப் நேரியார் இல்லம் (சிவப்பு) இரண்டாமிடத்தையும், புனித அந்தோனியார் இல்லம் (பச்சை)மூன்றாமிடத்தையும் பெற்றன.

பாடசாலை அதிபர் திருமதி லு.மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவின் பிரதம விருந்தினராக வடமராட்சி கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். செல்லத்துரை கலந்து கொண்டார். (36)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
16
—
11
—
1959



மறைவு
05
—
03
—
1988

திருமதி அருள்மணி(வதனி) சச்சிதானந்தன்
திதி 09- 03- 93

காலத்தால் அழியாத ஒளி விளக்காய்
ஞாலத்தில் வாழ்ந்த நீ எமைப்பிரிந்து
ஆண்டுகள் ஐந்தானாலும்
எஞ்ஞான்றும் உனை மறவோம்.

இப்படிக்கு
உனது பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி. (4424)

## நினைவு கூருகின்றோம்...
## 1993-03-09

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் திருக்கோணமலையில் முஸ்லீம் ஊர்காவற் படையினர் மீதான தாக்குதல் நடவடிக்கையினை மேற்கொண்டு விட்டுத் திரும்பி வருகையில் மூதூர் 64ஆம் கட்டைப் பகுதியில் எதிர்பாராத விதமாக நீரில் மூழ்கியதில் எமைப்பிரிந்த

★ பவ்வா (தம்பாப்பிள்ளை பத்தக்குட்டி - பள்ளிக்குடியிருப்பு, மூதூர் - திருமலை)

அம்பாறை - கல்முனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினராற் சுட்டுக் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்.

தமிழீழக் கடற்பரப்பில் (யாழ் - காங்கேசன்துறை, மயிலிட்டி) தொழிலிற்கெனச் சென்றிருந்த போது சிறிலங்காக் கடற்படையினராற் படகுடன் மூழ்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்ட கடற்றொழிலாளர்களான 2 தமிழர்கள்.

1987ஆம் ஆண்டு யாழ் - கைதடி, நாவற்குழிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

சிவா (வேலுப்பிள்ளை சிவராசா - குடமியன், வரணி, கொடிகாமம் - யாழ்.)

1988ஆம் ஆண்டு யாழ் - நல்லூர் கல்வியங்காட்டுப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைற் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

ரவி (கார்மேகம் சண்முகராசா - கண்டி- மலையகம்)

1992ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய-

அருச்சுனன் - அருட்சிவம் (லோறன்ஸ் சுரேஷ்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**
(சி-6155)

நல்லூர் பிரதேச நூலகம்
ம.நகர.பி.மன்றம்
யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு
உன் நடத்தையின் நெறி உலகம் முழுவதற்கும் உகந்த சட்டமாக ஆகக்கூடிய நிலையில் நீ நடந்து கொள்.

— இம்மேன்யல் கான்ட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 09-03-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த.பெ. எண் 05

## உலகரங்கில்முன்மாதிரியாக தமிழீழப் பெண்கள்

"எமது போராட்டத்தினுள் ஒரு போராட்டமாக பெண் விடுதலைப் போர் இன்று முனைப்புப் பெற்று வருகின்றது. பெண் விடுதலை என்ற இலட்சியப் போராட்டமானது எமது விடுதலை இயக்கத்தின் மடியில் பிறந்த"அக்கினிக் குழந்தை" இவ்வாறு சர்வதேச மகளிர்தினம் குறித்து தலைவர் பிரபாகரன் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைவர் பிரபாகரனின் இவ் அறிவிப்பானது தமிழீழப் பெண்களின் இன்றைய யதார்த்தத்தைப் பிரதிபலிப்பதாகவுள்ளது. உண்மையில் இன்று தமிழீழப் பெண்கள் போராட்டத்திற்குள் ஒரு போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள், தமிழீழ ஆண் வர்க்கத்தினர் தமது தேசிய சுய நிர்ணய உரிமைக்காக மட்டும் போராடிக் கொண்டிருக்கையில் பெண்களோ தேசிய ஒடுக்குமுறைக்கு மட்டுமல்லாது, காலம் காலமாக தமது சமூகத்திலேயே தமக்கு எதிராக இழைக்கப்பட்டு வரும் அநீதிக்கும், ஒடுக்கு முறைக்கும் எதிராகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

இதில், தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் தமிழீழப் பெண்களின் முன் மாதிரி உலகத்திற்கே எடுத்துக்காட்டானதொன்றாகும். நீண்ட காலமாக ஆண் ஆதிக்கத்தின் பிடியில் இருந்து வந்த ஒரு சமூகத்தில் இருந்து உலகிற்கு முன்னுதாரணமாக திகழும் ஓர் ஆயுதப் போராட்டத்தை நடத்தக் கூடிய அளவிற்கு சமூகத் தளைகளை அறுத்தெறிவதென்பது இலகுவில் நடக்கக்கூடிய தொன்றல்ல. சுமார் பத்துவருடங்களுக்கு முன்னர், இது ஒரு கருத்துநிலை அம்சமாகவே இருந்தது. சிலர் இதனைக் கிண்டல் கூடச் செய்தனர். ஆனால், இன்று இதன் செயற்பாடும், வளர்ச்சியும் ஆச்சரியத்தில் ஆழ்த்தும் ஒன்றாகவே உள்ளது.

மேலும், கடந்த பத்தாண்டு காலப் பகுதியிலும், தேசிய விடுதலைக்காக ஆயுதம் ஏந்திய பெண்கள் நிலைநாட்டிய சாதனைகள் அளப்பரி

# உலக சனத்தொகையில் அரைப்பங்கினரான பெண்களுக்கு சம நீதி கிட்டவில்லை

## ஐ. நா. கணிப்பீடு தரும் தகவல்

தரவுகளும் கணிப்பீடுகளும் உலகின் எல்லாப்பகுதிகளிலும் பெண்கள் புதிய பொருளாதாரச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொள்ளுகிறார்களென்பதையும் பொருளாதார ரீதியில் புதிய பங்களிப்புகளைச் செய்கிறார்களென்பதையும்எடுத்துக்காட்டுகின்றன. ஆனால் அவர்களது பொருளாதார ரீதியிலான தொழிலீடுபாடு ஆண்களிலிருந்து வேறுபட்டதாகவும் சமத்துவமற்றதாகவும் காணப்படுகிறது. இவற்றிற்கெல்லாம் மோசமானது பெண்களின் தொழிலீடுபாடு பொருளாதாரப் பெறுமதியற்றதென்று கூறப்படுவதும் அவர்களின் பங்களிப்பு அளவுக்கு உட்படுத்தப் படாமையுமாகும். கடையியாகப் பார்க்கப்போனால் ஒட்டு மொத்தமான பொருளாதார அரசியல் தீர்மானமெடுக்கும் வகையிலான அவர்களது பங்களிப்பு ஓரளவுக்கு அதிகரித்துள்ளதாயினும் மிகக் குறைந்தளவிலேயே இருக்கிறது.

பெண்கள் ஆண்களிலும் பார்க்க கூடிய காலம் வாழ்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியுமானாலும் 1990 ஆம் ஆண்டளவில் உலகில் உள்ள சனத்தொகையான 5.33 பில்லியனில் 2.63 பில்லியன் பெண்கள் என்பது அநேகருக்குத் தெரியாது. பல பிரதேசங்களில்பெண்கள் ஆண்களை விடக் கூடுதலாக விகிக்கிறார்கள். பெண்குழந்தைகளிலும் பார்க்க ஆண்குழந்தைகளே உலகில் அதிகமாகப் பிறந்தாலும் எல்லா வயதுகளிலும் பெண்களின் இறப்பு வீதம் ஆண்களிலும் பார்க்கக் குறைந்ததாகும். எது எவ்விதமானாலும் சிலநாடுகளில் இப்பொழுதும் கைம்பெண்கள் எரிபடுவதும்,சீதனக் கொலைகள் நடைபெறுவதையும் சில கிராமங்களில் பெண் சிசுக்கள் கொல்லப்படுவதும் யதார்த்தத்தில் இருக்கிறது. அதுவு மல்லாமல்ஆண்குழந்தைகளின் மேல் உள்ள விருப்பத்தின் அடிப்படையில் கருச்சிதைவுகளும் உண்டாக்கப்படுகின்றன. இச்சந்தர்ப்பங்களில் பெண்களின் இறப்பு அதிகமாகிறது.

அநேக வளர்முக நாடுகளில் பெண்கள் மிக இளமையிலேயே விவாகம் செய்கிறார்கள். ஆபிரிக்கப் பெண்களில் 50 வீதத்தினரும், ஆசியப் பெண்களில் 40 வீதத்தினரும் லற்றின் அமெரிக்க நாட்டுப் பெண்களில் 30 வீதத்தினரும் பதினெட்டு வயதிலேயே விவாகம் செய்து விடுகிறார்கள். ஆண்கள் வயது அதிகரித்த பின்னரே விவாகம் செய்கிறார்கள். வங்காள தேசத்திலும் சூடானிலும் ஆண்கள் தங்கள் முதலாவது விவாகத்தை பெண்கள் விவாகம் செய்யும் வயதிலும் பார்க்க சராசரி ஏழு ஆண்டுகளுக்குப் பின்னரே செய்கிறார்கள்.இவ் வயது இடைவெளி பெண்களை அனுபவம் அற்றவர்களாகவும் ஆண்களில் தங்கியிருக்க வேண்டிய நிலைக்கும் தள்ளுகிறது. அதுவும் அவள் குடும்பத்தின் பொருளாதாரத்துக்கு தன் பங்களிப்பைச் செய்து கொண்டிருக்கும் நிலையிலேயே நடைபெறுகிறது. இவ்விடைவெளி ஆண்களிலும் பார்க்க பெண்களே அதிக அளவில் விதவைகளாக வேண்டிய சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்துகிறது.

குடும்ப வாழ்வின் இருண்ட பக்கமான வன்முறைப் பிரயோகம் பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள்,ஊனமுற்றோர் மீது நடத்தப்படுகிறது. ஆஸ்திரிய நாட்டில் 1985ஆம் ஆண்டு ஏற்பட்ட 1500விவாகரத்துக்களில் 59 வீதம் மனைவியர் மீதுபிரயோகிக்கப்பட்ட வன்முறையே காரணமாக இருந்தது.இந்தியாவில் முறையே 1985 இல் 999 பெண்களும், 1986இல் 1319 பெண்களும், 1987 இல் 1786 பெண்களும் சீதனக்கொடுமை காரணமாக இறந்தார்கள்.

அநேகமாக எல்லா நாடுகளிலும் பெண்கள் வாக்குரிமை பெற்றவர்களாயிருந்தும் தேர்ந்தெடுக்கப்படும் பதவிகளுக்கும் அரசியல் வாழ்விற்கும் அனுமதிக்கப்படுவதில்லை. தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள், தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றிலுள்ள உயர் உத்தியோகங்களிலிருந்தும் இவர்கள் ஒதுக்கப்பட்டுள்ளனர். ஐ. நாவில் அங்கம் வகிக்கும் 159 நாடுகளில் (1990-ம் ஆண்டுக் கணக்குப்படி) ஆறு நாடுகளின் தலைமை மாத்திரம் பெண்களிடம் இருந்தது. உலக நாடுகளிலுள்ள அமைச்சரவைகளில் ஆக 3.9 வீதம் தான் பெண்கள் அமைச்சர்களாக இருக்கிறார்கள். உலகில் 93 நாடுகளில் பெண் அமைச்சர்களே இல்லை. ஆகக் கூடிய

ச. தியாகராஜா

மாற்றமடையாத அளவில் பெண்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வகிப்பது நோர்டிக் நாடுகளான ஸ்கண்டிநேவிய நாடுகளில்தான்.மேற்கு ஐரோப்பாவில் தொழிற்சங்கங்களில் 30 வீத அங்கத்துவத்தைக் கொண்டுள்ள பெண்கள் அச் சங்கங்களின் உயர்பீடங்களுக்குத் தெரிவு செய்யப்படுவதில்லை.சில மேற்கு ஐரோப்பிய நாடுகளில் 25- லிருந்து 45வீத அளவுக்குப் பெண்கள் அரசியல் கட்சிகளில் அங்கத்தவர்களாக இருந்தபோதும் கட்சிகளின் உயர்பீடங்களுக்கு அனுமதிக்கப்படுவதில்லை.அரசியல் தலைமைத்துவத்திலிருந்து பெண்கள் ஒதுக்கப்பட்டாலும் அரசசார்பற்ற சமூகஸ்தாபனங்களில் அதிகாரமுள்ள உயர்ஸ்தானங்களில் அவர்கள் இருப்பதை காணலாம். தமது குடும்பங்களின் நலன்களில் அவர்கள் காட்டும் அக்கறை இவ்வடிமட்ட ஸ்தாபனங்களின் உயர் பீடங்களை இவர்கள் கைப்பற்றுவதற்கு உதவியாயிருக்கிறது அதிகாரக்குவியல் கொண்ட நிறுவனங்களின் அடிமட்ட நிலைகளில் பெண்கள்தொழில் புரிகின்றனரேயாயினும் படிநிலை உயரஉயர அவர்களின் தொகையும் வீழ்ந்து கொண்டு செல்லுகிறது. இதற்கு ஐ. நா ஸ்தாபனமே நல்ல எடுத்துக் காட்டாகும். அதில் உள்ள உயர் முகாமைத்துவ நிலைகளில் மிகக் குறைந்தளவு அதாவது 3.6 வீதப் பெண்களே கடமை புரிகிறார்கள்.

போர்களின் போது பொது மக்களே கூடுதலாக பாதிக்கப் பட்டும் இறக்கவும் செய்கிறார்கள். அப்பொதுமக்களில் பெண்களும் சிறார்களும்தான் பாதிப்புக்குக் கூடுதலாக ஆளாகுகிறார்கள். பல பெண்கள் பார்வையாளர்களாக இல்லாமல் சமாதான முயற்சிகளில் அரசியல் சார்பற்ற முறையில் ஈடுபட்டுள்ளனரேயாயினும் மிகக் குறைவான அளவினரே சமாதானத்துக்குப் பங்களித்தவர்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.

ஆண்பெண் பாலாரிடையே எழுத்தறிவைப் பொறுத்தவரையில் சம அந்தஸ்து நிலை ஏற்படுவதற்கு வரலாற்று ரீதியாக பெண்களுக்குக் கொடுக்கப்பட்ட பற்றாக்குறைக்கல்வி தடையாக இருந்தபோதும் பாடசாலைகளில் இருபாலாரும் சேர்ந்து கொள்ளும் சமநிலை சிறார்களின் பிறப்பு வேகத்துக்குச் சமமாக கல்வி வளங்களின் பெருக்கமும் இருப்பதால் விரைவில் ஏற்பட்டு விடும்.

1970களில் இருந்து தொழிலாளர்களின் தொகையில் பெண்களின் அளவு அதிகரித்து வந்துள்ளது. எங்கும்பெண்கள் முன்னயதைவிட வீட்டுவேலைகளுக்கு அப்பால் வெளியில் வேலைசெய்கிறார்கள்.இதற்கு மாறாக ஆண்கள் முன்னையதை விட குறைவாக வெளி வேலைகளிலும், வட அமெரிக்கா, அவுஸ்திரேலியா,மேற்கு ஐரோப்பா போன்ற இடங்களில் ஓரளவுக்கு கூடியளவில் வீட்டு வேலைகளிலும் ஈடுபடுகிறார்கள்.

1990 ஆம் ஆண்டில் வருமானம் பெறும் தொழில்களில் ஈடுபட்டிருந்த 8.8 மில்லியன் பெண்களில் அரைவாசிக்குஅதிகமானோர் ஆசியப் பெண்களாகவும், வளர்ச்சியடைந்த நாடுகளில் 29 வீதத்தினராகவும் 9 வீதத்தினரை ஆபிரிக்காவிலும் 5 வீதத்தினர் லற்றின் அமெரிக்காவிலும் வாழ்ந்தனர்.

வளர்ச்சியடைந்துவரும் பிரதேசங்களிலும் சமீப காலங்களில் வளர்ச்சியடைந்த பிரதேசங்களிலும் கூட அண்மையில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சிகாரணமாகபெண்களின் தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளது. தொழில் விரிவாக்கம் அல்லது தொழில் அபிவிருத்திகளால் பெண்கள்தான் மிகவும் காலம் தாழ இலாபம் அடைபவர்கள். ஆனால் தொழிற் சுருக்கம் அல்லது வீழ்ச்சியால் முதலில் பாதிப்படைபவர்கள் பெண்களே.

ஆபிரிக்கா ஆசியா போன்ற நாடுகளில் இப்பொழுதும் கூடுதலான பிரதேசங்களில் விவசாயம், காணி போன்றவற்றில் அதிகம் வேலை செய்வோரும் பெண்களேயாகும். உலகம் பூராவும் பார்க்கும் போது கைத்தொழில்களில் குறைவான தொகையில் பெண்கள்வேலை செய்கிறார்கள்.

# தலைவரின் வழிகாட்டலினால் தலை நிமிர்ந்து நிற்கின்றனர்

## தமிழீழ பெண்கள் குறித்து ஜெயா

இன்றைய உலகிலே வாழுகின்ற மக்கள் மத்தியிலே ... இன்று பெண்களுக்கு ஏற்படுகின்ற பாலியல் ... சமத்துவம் நிலவ வேண்டும் எந்த இடத்திலும் பெண்

இராணுவப்

காந்தன் [வயது 46] வல்வெட்டித்துறை, சிவகுரு - செல்லத்துரை [வயது 55] வல்வெட்டித்துறை, வினாசித்தம்பி-நடராசசிங்கம் [வயது 37] பருத்தித்துறை, இராமலிங்கம் -நித்தியானந்தராசா [வயது 37] பருத்தித்துறை, யோன் பிள்ளை-மைக்கல் [வயது 47] கிளாலி, இராசலிங்கம்-

நாதன் [வயது 46] தெல்லிப்பழை, சுப்பர் - நடராசா [வயது 73] தெல்லிப்பழை, அந்தோனிப்பிள்ளை - பிரான்சீஸ் [வயது 49] பூநகரி, நாகமுத்து - சத்திவேல் [வயது 49] நாவற்காடு, ஆறுமுகம் - கதிரமலை [வயது 49] மன்னார், செல்வராசா - பாக்கியநாதன் [வயது 53] சாவகச்சேரி, வேலுப்பிள்ளை - சௌந்தரராசன் [வயது 24] சாவகச்

கத்திலேயே தமக்கு எதிராக இழைக்கப்பட்டு வரும் அநீதிக்கும், ஒடுக்கு முறைக்கும் எதிராகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

இதில், தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் தமிழீழப் பெண்களின் முன் மாதிரி உலகத்திற்கே எடுத்துக்காட்டானதொன்றாகும். நீண்ட காலமாக ஆண் ஆதிக்கத்தின் பிடியில் இருந்து வந்த ஒரு சமூகத்தில் இருந்து உலகிற்கு முன்னுதாரணமாக திகழும் ஓர் ஆயுதப் போராட்டத்தை நடத்தக் கூடிய அளவிற்கு சமூகத் தளைகளை அறுத்தெறிவதென்பது இலகுவில் நடக்கக்கூடிய தொன்றல்ல. சுமார் பத்துவருடங்களுக்கு முன்னர், இது ஒரு கருத்துநிலை அம்சமாகவே இருந்தது. சிலர் இதனைக் கிண்டல் கூடச் செய்தனர். ஆனால், இன்று இதன் செயற்பாடும், வளர்ச்சியும் ஆச்சரியத்தில் ஆழ்த்தும் ஒன்றாகவே உள்ளது.

மேலும், கடந்த பத்தாண்டு காலப் பகுதியிலும், தேசிய விடுதலைக்காக ஆயுதம் ஏந்திய பெண்கள் நிலைநாட்டிய சாதனைகள் அளப்பரியது. உலகையே வியப்பில் ஆழ்த்தக்கூடியவை. விடுதலைப் புலிகளின் பெண் போராளிகளின் ஆற்றலையும், திறமையையும் கண்டு அவர்களுடன் போரிட்ட இந்திய இராணுவத்தினரும், சிறிலங்கா இராணுவத்தினரும் பெரும் ஆச்சரியமடைந்தனர். இந் நிலையானது, தமிழீழப் பெண்கள் தமது உரிமைகளை வென்றெடுப்பதில் எவ்வளவு உறுதியோடும், முனைப்போடும் உள்ளனர் என்பதையும், அதற்கு விடுதலைப் புலிகளின் தலைமை எந்தளவிற்கு வழிசமைத்துள்ளது என்பதையுமே அது காட்டுவதாக அமைந்துள்ளது.

இதேவேளை, தேசிய விடுதலைப்போரில் தமது ஆற்றலை வெளிப்படுத்தி வரும் தமிழீழப் பெண்கள், தமது இனத்துக்குள் தமக்கிழைக்கப் பட்டிருக்கும் சமூக அநீதிகளுக்கெதிராகவும் போர் ஒன்றை நடத்தி வருகின்றனர். சமத்துவமான ஒரு சமுதாயத்தை உருவாக்கும் பெரும் முயற்சி ஒன்றிலும் ஈடுபட்டுள்ளனர். இதில் அவர்கள் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் கண்டுள்ளார்கள்.

அதாவது, தமிழீழப் போராட்டத்தில் பெண்களின் பங்கு என்பது ஆண் ஆதிக்கத்தினையும் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகளையும் எதிர்க்கும் ஆற்றலை வழங்கியுள்ளதோடு, தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடிய சக்தி படைத்தவர்களாகவும் மாற்றியுள்ளது. இது பெண்களுக்கென ஒரு முழுமையான சம அந்தஸ்தை இன்னும் பெற்றுக் கொடுக்க முடியாவிட்டாலும், பெண்களுக்கெதிராக இழைக்கப்படும் பாரிய அநீதிகளை தடுத்து நிறுத்தவும், தட்டிக் கேட்கவும் ஒரு பெரும் சக்தி ஒன்று தமிழழத்தில் உருவாகியுள்ளது என்பதை எவரும் மறுக்க முடியாது. இதனைத் தென்னாசியாவிலேயே தமிழீழம் தான் முதலில் பெற்றுள்ளது என்பதும் பெருமைக்குரியதாகும்.

இவ் வளர்ச்சியும், எழுச்சியும், தலைவர் பிரபாகரன் குறிப்பிட்டுள்ளது போன்று ஒப்பிலாத ஒரு தனிச்சரித்திரமாகும். ஆனால், தமிழீழத்தில் இடம்பெறும் இவ்வளர்ச்சி தனியாக தமிழினத்திற்கு மட்டுமல்ல, உலகில் அடக்கப்பட்டுள்ள சகல பெண்களுக்கும் குறிப்பாக தென் ஆசிய பிராந்தியத்திற்குமே ஒரு முன்னுதாரணமாகும்.

ளிலும் பார்க்க ஆண்குழந்தைகளே உலகில் அதிகமாகப் பிறந்தாலும் எல்லா வயதுகளிலும் பெண்களின் இறப்பு வீதம் ஆண்களிலும் பார்க்கக் குறைந்ததாகும். எது எவ்விதமானாலும் சிலநாடுகளில் இப்பொழுதும் கைம்பெண்கள் எரிபடுவதும், சீதனக் கொலைகள் நடைபெறுவதையும் சில கிராமங்களில் பெண் சிசுக்கள் கொல்லப்படுவதும் யதார்த்தத்தில் இருக்கிறது. அதுவு

பக்கமான வன்முறைப் பிரயோகம் பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள், ஊனமுற்றோர் மீது நடத்தப்படுகிறது. ஆஸ்திரிய நாட்டில் 1985ஆம் ஆண்டு ஏற்பட்ட 1500விவாகரத்துக்களில் 59 வீதம் மனைவியர் மீதுபிரயோகிக்கப்பட்ட வன்முறையே காரணமாக இருந்தது. இந்தியாவில் முறையே 1985 இல் 999 பெண்களும், 1986இல் 1319 பெண்களும், 1987 இல் 1786 பெண்க

ல்லை. சில மேற்கு ஐரோப்பிய நாடுகளில் 25- லிருந்து 45வீத அளவுக்குப் பெண்கள் அரசியல் கட்சிகளில் அங்கத்தவர்களாக இருந்தபோதும் கட்சிகளின் உயர்பீடங்களுக்கு அனுமதிக்கப்படுவதில்லை. அரசியல் தலைமைத்துவத்திலிருந்து பெண்கள் ஒதுக்கப்பட்டாலும் அரசசார்பற்ற சமூகஸ்தாபனங்களில் அதிகாரமுள்ள உயர்ஸ்தானங்களில் அவர்கள் இருப்பதை காணலாம். தமது குடும்பங்க

யாக பெண்களுக்குக் கொடுக்கப்பட்ட பற்றாக்குறைக்கல்வி தடையாக இருந்தபோதும் பாடசாலைகளில் இருபாலாரும் சேர்ந்து கொள்ளும் சமநிலை சிறார்களின் பிறப்பு வேகத்துக்குச் சமமாக கல்வி வளங்களின் பெருக்கமும் இருப்பதால் விரைவில் ஏற்பட்டு விடும்.

1970களில் இருந்து தொழிலாளர்களின் தொகையில் பெண்களின் அளவு அதிகரித்து

படைபவர்கள் பெண்களே.

ஆபிரிக்கா ஆசியா போன்ற நாடுகளில் இப்பொழுதும் கூடுதலான பிரதேசங்களில் விவசாயம், காணி போன்றவற்றில் அதிகம் வேலை செய்வோரும் பெண்களேயாகும். உலகம் பூராவும் பார்க்கும் போது கைத்தொழில்களில் குறைவான தொகையில் பெண்கள்வேலை செய்கிறார்கள்.

# தலைவரின் வழிகாட்டலினால் தலை நிமிர்ந்து நிற்கின்றனர்

## தமிழீழ பெண்கள் குறித்து ஜெயா

இன்றைய உலகிலே வாழுகின்ற மக்கள் மத்தியிலே குறிப்பாக பெண்கள் மத்தியிலே தமிழீழப் பெண்கள் தலைநிமிர்ந்து நிற்கிறார்கள் என்றால் இன்றைய எமது இந்த விடுதலைப் போராட்டத்தினுடைய எங்களுடைய தேசியத் தலைவர், எங்களுடைய தாயகத் தலைவர் எம்மின மக்கள் தலைவர் திரு. வே. பிரபாகரனுடைய வழி நடத்தலும் வழிகாட்டலுமே என்பதை நாம் பெருமையுடன் நினைவு கூரவேண்டும் என நேற்று இடம்பெற்ற அனைத்துலக மகளிர் தின பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி ஜெயா தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவித்ததாவது: இன்று இந்த மண்ணிலே நாங்கள் சுதந்திரமாக நடமாடுகிறோம் என்றால் பெண்கள் சமத்துவமாகவும் தங்களுடைய கௌரவத்துடனும் வாழ வழி அமைக்கப் பட்டிருக்கிறது என்றால் அது எங்கள் தலைவரின் வழிகாட்டலாலேயே என்பதை எமது நெஞ்சங்களில் ஆழப்பதித்துக் கொள்ள வேண்டும்.

காட்டிலும் மேட்டிலும் நின்று கண்விழித்திருந்து களமாடி நிற்கின்ற வீரமும், தியாகமும் இங்கே தமிழீழப் பெண்களுக்கு நிறைய வந்திருக்கிறது. இந்த மண்ணிலே வாழ்கின்ற ஒவ்வொரு பெண்ணும் தங்களின் உள்ளத்திலே இந்த வீரத்தையும் தியாகத்தையும் வளர்ப்பதற்கான ஒரு பெரிய தளம் இங்கே அமைக்கப்பட்டுள்ளது. இன்று பெண்கள் மத்தியிலே தலைதூக்கியிருக்கின்ற சீதனப் பிரச்சினை, வேலைவாய்ப்புப் பிரச்சினை இதனால் ஏற்படுகின்ற சம்பள வேறுபாட்டுப் பிரச்சினை என்பன இன்று நாம் எதிர் நோக்குகின்ற மிகப் பெரிய பிரச்சினைகளாக பெண்களை பாதிக்கின்ற பிரச்சினைகளாக இருக்கின்றன.

எல்லாவற்றிற்கும் மேலாக இன்று பெண்களுக்கு ஏற்படுகின்ற பாலியல் துன்புறுத்தல் என்பதும் பாலியல் தொந்தரவுகள் என்பதும் பெண்களை மனிதப்பிறவிகளாக மதிக்கின்ற அந்த உயர் நிலையை இங்கே தாழ்த்தி விட்டுள்ளன. இவை எல்லாம் எமது மண்ணிலே இருந்து அறவே ஒழிய வேண்டுமாயின் நாம் அனைவரும் இணைந்து போராட முன்வர வேண்டும்.

இன்று இந்த அனைத்துலக பெண்கள் நாளிலே நாம் அனைவரும் ஒரு தீர்மானம் எடுத்துக்கொள்வோம். இந்த மண்ணிலே இருக்கின்ற பேதங்கள் மறைய வேண்டும். பெண் சமத்துவம் நிலவ வேண்டும் எந்த இடத்திலும் பெண்களுக்கு எதிராகக் காட்டப் படுகின்ற பாரபட்சங்களை அறவே ஒழிப்போம், பெண்களுக்கு எதிராக இழைக்கப் படுகின்ற அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுப்போம்.

இந்த வருடத்தைய எமது பிரகடனமாக எதிர்காலத்திலே நாம் எமது வேலைத் திட்டமாக இதை எடுத்துக் கொள்வோம். இதற்கு அனைத்துத் தமிழீழ மக்களும் ஒன்றிணைந்து எழுச்சியுடன் இணைந்து போராட முன் வரவேண்டும் என்றார்.

இராணுவப்

காந்தன் [வயது 46] வல்வெட்டித்துறை, சிவகுரு - செல்லத்துரை [வயது 55] வல்வெட்டித்துறை, வினாசித்தம்பி-நடராாசசிங்கம் [வயது 37] பருத்தித்துறை, இராமலிங்கம் -நித்தியானந்தராசா [வயது 37] பருத்தித்துறை, யோன் பிள்ளை-மைக்கல் [வயது 47] கிளாலி, இராசலிங்கம்-டொனால் சுரேஸ் [வயது 24] குருநகர். மனோகரதாசன்-எஸ்பீகியா [வயது 31] குருநகர், காணிக்கநாதன் - நிக்ஷன் [வயது 18] குருநகர், யோன்பீற்றர் - எட்மன் மரிய நேசன் [வயது22] குடத்தனை, இரத்தினசிங்கம்-மதன் [வயது 19] புதுக்குடியிருப்பு, அந்தோனிப்பிள்ளை - பத்திநாதன் [வயது 42] பருத்தித்துறை, இராமன் - சடையன் [வயது 42] புதுக்குடியிருப்பு, பெரியதம்பி - முருகையா [வயது 47] பருத்தித்துறை, சுப்பிரமணியம் - சற்குணநாதன் [வயது 46] தெல்லிப்பழை, சுப்பர் - நடராசா [வயது 73] தெல்லிப்பழை, அந்தோனிப்பிள்ளை - பிரான்சீஸ் [வயது 49] பூநகரி, நாகமுத்து - சத்திவேல் [வயது 49] நாவற்காடு, ஆறுமுகம் - கதிரமலை [வயது 49] மன்னார், செல்வராசா - பாக்கியநாதன் [வயது 53] சாவகச்சேரி, வேலுப்பிள்ளை - சௌந்தரராசன் [வயது 24] சாவகச்சேரி, நாகமுத்து - செல்வராசா [வயது 44] சண்டிலிப்பாய் என்போர்.

மேலும் இளவாலைப் பகுதியிலிருந்து விடுவிக்கப்பட்ட 20 பேரின் பெயர்கள் வருமாறு;

தாசரஸ் டெசனிசியா [19] இளவாலை, பிரான்ஸ்சிக்கா [24] பண்டத்தரிப்பு, செல்லம்மா மார்க்கண்டு [53] இளவாலை, அன்னம்மா மருசிலின் [60] இளவாலை, மார்க்கண்டு ராஜ்குமார் [24], சிறுவிளான் பஸ்தியன் பிள்ளை - ஆசைப்பிள்ளை [77] இளவாலை, ஆறுமுகம் -கதிரமலை [60] மாதகல், கந்தஞானவர் [62] மாதகல், எணசிபர்னகுணசேகர் [55] அளவெட்டி, மரியாம்பிள்ளை -சேவியர் [50] யாழ். அப்போதனசபை இளவாலை, ரூத்மேரி [52] இளவாலை, கார்த்திகேசு கனகமணி [65] மாதகல், நாகமணி - இளையதம்பி [68] மாதகல், நாகராசா - பாக்கியம் (70) மாதகல், சிவதாபரம் - சிவகுரு (72) அளவெட்டி, சிவகுரு-தங்கரத்தினம் (60) அளவெட்டி.

# போராட்டத்தின் மூலம் புதிய சமுதாயம் உருவாகும்

## கரிகாலன் உரை

[யாழ்ப்பாணம்]

பெண்கள் மட்டும் போராடி பெண்விடுதலையை இந்தச் சமூகத்திலிருந்து ஏற்படுத்தி விடமுடியாது. ஆண்களும் பெண்விடுதலைக்காக ஒத்துழைக்க வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள். இவ்வாறு தமிழீழ உதவி அரசியல் பொறுப்பாளர் திரு. கரிகாலன் நேற்று யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் இடம் பெற்ற அனைத்துலக பெண்கள்தின கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது: இன்றும் ஒரு மிகப் பெரும் பெண் ஒடுக்கு முறையாக சீதனப் பிரச்சினை இருந்து வருகிறது. அதற்காகவே பல ஆண்கள் வெளிநாடு செல்கின்றனர். தமது சகோதரிகளை சீதனப் பேய்களிடம் இருந்து விடுவிப்பதற்காகவுமே இவர்கள் வெளிநாடுகளில் பணம் தேடும் முயற்சியில் ஈடுபடுகின்றனர்.

இன்று உலகளாவியரீதியிலே தமிழீழப் பெண் என்றால் அஞ்சி, அடங்கி, ஒடுங்கி நடக்கின்ற நிலையை விடுதலைப் புலிகள் ஏற்படுத்தியுள்ளனர்.

அந்த நிலையைப் பயன் படுத்தி பெண்கள் பெண் சமுதாயம் இந்த பெண் விடுதலைக்கு அணிதிரள வேண்டும். இந்தப் போராட்டத்தின் மூலம் ஒரு புதிய சமுதாயம் உருவாகப் போகிறது. இதிலே ஆண்போராளிகள் போராடுகின்றனர். ஆண் போராளிகளுக்குச் சமமாக பெண் போராளிகள் நின்று போராடுகிறார்கள். எமது இனத்திற்கு எதிரான சக்திகளுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கின்ற ஒரே அமைப்பின் கீழ் ஆண், பெண் போராளிகள் போராடும் இவ் வேளையில் ஒரு பெண் விடுதலைக்கான அத்திவாரம் அங்கு இடம் பெறுகிறது. அந்த அத்திவாரத்தின் பயனாக அந்தநாடு விடுவிக்கப்படுகின்ற பொழுது அங்கே பெண்களும் விடுவிக் கப்படுகின்றார்கள். ஒரு சமத்துவமான பெண் விடுதலை கொண்ட ஒரு சமுதாயம் அங்கே உருவாகப் போகின்றது. இந்த நாடு விடிவு பெறும் வரை பெண்கள் நிச்சயம் விடிவு பெற முடியாது என்பதை அனைவரும் உணர வேண்டும்.

இன்று தென்தமிழீழத்தில் எமது சகோதரிகள் பலர் பாலியல் வன்முறைக்கு உட்படுகின்றனர். தேசவிரோத சக்திகள் விருப்பத்திற்கு மாறானபலாத்காரங்களைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். இந்த சொல்லொணாத் துயரங்களுக்கு மத்தியில் தென்தமிழீழ பெண்கள் அவலம் தோய்ந்த வாழ்க்கையை வாழுகின்றனர் என்றார்.

## அன்னை பூபதி

## பொது அறிவுதேர்வு

தற்கொடையாளி அன்னை பூபதி நினைவு பொது அறிவுத் தேர்வு திட்டமிடப்பட்டபடி இம் மாதம் 30 - 3 - 93 செவ்வாய்க்கிழமை நடைபெற விருப்பதால் மேற்படி தேர்விற்குரிய விண்ணப்பங்கள் அனைத்தையும் பாடசாலை அதிபர்கள் அவ்வக்கோட்டங்களுக்கு நாளை புதன்கிழமைக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுவதால் இதுவரை விண்ணப்பப் படிவங்களைப் பெறாத பாடசாலை அதிபர்கள் தமக்குரிய கோட்டங்களுடன் தொடர்புகொண்டு உடன் பெற்று வழங்குமாறு வேண்டப்படுகின்றனர்.

ஈழநாதம்

## தப்பி ஓடிய சிப்பாய் விரட்டிப் பிடிக்கப்பட்டார்

இராணுவ முகாமிலிருந்து வெளியேறி தப்பியோடிய இராணுவச் சிப்பாய் ஒருவரை சக இராணுவ சிப்பாய்கள் மோட்டார் சைக்கிளில் விரட்டிச் சென்று கைது செய்த சம்பவம் ஒன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

கடந்த சனியன்று பகல் பதினொருமணியளவில் கொக்கட்டிச் சோலை இராணுவ முகாமிலிருந்து இராணுவச் சிப்பாய் ஒருவர் தப்பியோடிய போது அவரை அதே முகாமைச் சேர்ந்த வேறு சில படையினர் மோட்டார் சைக்கிளில் விரட்டிச் சென்றதாகவும், தப்பியோடிய சிப்பாயை இவர்கள் கடுக்காய் முனை என்ற பகுதியில் வைத்து பிடித்து மீண்டும் முகாமிற்கு கொண்டு சென்றதாகவும் தெரியவருகிறது.

## மண்முனைப் பகுதியில் புதிய இராணுவ முகாம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேலும் ஓர் இராணுவ முகாமை அமைத்துள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை என்ற இடத்திலேயே இந்த புதிய முகாம் அமைக்கப்ட்டுள்ளது.

கடந்த சனியன்று காலை இப்பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் இம் முகாமை அமைத்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### 45-ம் நாள் நினைவஞ்சலி



**கனகரட்ணம் ஜெகரூபி**

(ஆத்தை)

தாயின் மடியில்: 04-11-1980

தனிமையில் சென்றது: 24-01-1993

### சுழிபுரம் நோக்கி எறிகணை வீச்சு

[தொல்புரம்]

வலிமேற்கில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா ஆயுதப் படையினர் தமது காவல் நிலைகளிலிருந்து மக்கள் குடியிருப்புக்கள் மீது எறிகணைத் தாக்குதலை நடாத்தினர்.

இவ் எறிகணை வீச்சு நேற்றுக் காலை 6.25 மணியளவில் சுழிபுரம் பறாளாய் பகுதியை நோக்கி நடத்தப்பட்டது. இதனால் சேதங்கள் ஏதும் ஏற்படவில்லையெனத் தெரியவருகிறது. (36)

### 'குமாரி' இன்று புறப்படும்

[வடமராட்சி]

பருத்தித்துறை இறங்குதுறையில் மா இறக்கிக்கொண்டிருக்கும் 'குமாரி' கப்பல் இன்று பிற்பகல் கொழும்பு நோக்கி புறப்படும்.

காங்கேசன் துறையில் உணவுப் பொருள்களுடன் தரித்து நிற்கும் 'குமண' கப்பல் நாளை காலை பருத்தித்துறை துறைமுகத்திற்கு வரும். (யோ)

### வீரசிங்கம் மகாவித்தியாலயம் சாதனை

கலை, வர்த்தகப் பிரிவுகளில் கடந்த க. பொ. த. (உயர்தரம்) பரீட்சைக்கு யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்திலிருந்து தோற்றிய மாணவர்கள் அனைவரும் பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியைப் பெற்றுஉள்ளனர். (மு)

யாழ்-வன்னி என்பதுபற்றிய ஆலோசனைகளையும் மக்கள் மத்தியிலிருந்து போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு வேண்டி நிற்கிறது. அபிப்பிராயங்களையும் ஆலோசனைகளையும் எழுதி நேரிலோ, தபாலிலோ, ஈழநாதம் பணிமனைக்கோ, அல்லது போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் அபிப்பிராயப் பெட்டிகள் மூலமோ கூடிய விரைவில் கிடைக்கச் செய்யும்படி போக்குவரத்து கண்காணிப்பு பிரிவினர் கேட்டுள்ளனர்.

## யாழ். தமிழ்த்தாய்

### கடற்படையால் படகு பறிப்பு

[கிளாலி]

கிளாலிக் கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர் மீது கடற்படையினர் சுட்டதால் மீனவர் படகைவிட்டு நீந்திக் கரை சேர்ந்த சம்பவம் ஒன்று அண்மையில் நடைபெற்றதாக தெரியவருகின்றது. இச்சம்பவத்தில் கரைசேர்ந்தவர்கள் கிளாலியைச் சேர்ந்த இ. செபத்தியாம்பிள்ளை, க. காந்தி, சி. திருநாவுக்கரசு ஆர்யோர் ஆவர். இவர்களின் படகை கடற்படையினர் கொண்டு சென்றதாக கூறப்படுகின்றது. [86]

## படகில் சென்றவர் மீது சூடு ஒருவர்பலி; ஒருவர் காயம்

-காஞ்சிரங்குடாவில் சம்பவம்

நேற்று முன்தினம் பகல் பதினொரு மணியளவில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள முனைக்காடு- காஞ்சிரங்குடா முனையில் படகில் பயணம் செய்து கொண்டிருந்த இரு பொதுமக்கள் மீது இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றுமொருவர் காயமடைந்தார்.

படகில் சென்ற இவ் அப்பாவி பொதுமக்கள் மீது கொக்கட்டிச்சோலை முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஆரையம்பதியைச் சேர்ந்த தம்பி [வயது32] என்பவர் பலியானார். அதேயிடத்தைச் சேர்ந்த சதா [வயது22] என்பவர் காயமடைந்தார்.

## சமாதானப் பேச்சில் ஈடுபட அரசிடம் வற்புறுத்து

(கொழும்பு)

யுத்தத்தைக் கைவிட்டு சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறு ஐரோப்பிய நாடுகள் விடுதலைப் புலிகள் அமைப்பையும், சிறிலங்கா அரசையும் கேட்டுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கு, கிழக்குயுத்தத்தைச் சமாதான வழியில் ஒரு தீர்வுக்குக் கொண்டுவர அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளுமாறு உதவும் நாடுகளும், சர்வதேச நிதி நிறுவனங்களும் சிறிலங்கா அரசை வற்புறுத்தி வருவதாகவும் அச்செய்தி மேலும் கூறுகின்றது.

### மீட்புநிதி

வரும் நேர அட்டவணைப்படி மீட்பு நிதி சேகரிப்பு இடம் பெறவுள்ளதாக தமிழீழ மீட்பு நிதிப் பொறுப்பாளர் சொ. வெற்றியரசன் அறிவித்துள்ளார்

வலிகாமம், வடமராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு காலை 11.00 மணி முதல் 12.00 மணிவரை நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயம்

தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு பிற்பகல் 2.00 மணி தொடக்கம் 3.00 மணி வரை கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம் பிற்பகல் 3.30 மணி தொடக்கம் 4.30 மணிவரை சாவகச்சேரி இந்துக்கல்லூரி

தென்மராட்சி பச்சிலைப் பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு பிற்பகல் 5.00 மணி தொடக்கம் 6.00 மணி வரை கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்.

# பலதடவை நிர்வாணமாக்கி சித்திரவதை புரிந்தனர்

## பலாலி முகாமிலிருந்து விடுபட்டவர் தகவல்

(வடமராட்சி)

பலாலி இராணுவ முகாமில் வைத்து முதல் ஒன்பது மாதங்கள் கண்கள் கட்டப்பட்ட நிலையில் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டேன். அக்குறித்த காலத்தில் ஆறு தினங்கள் எனது உடலில் ஆடைகள் இன்றி நிர்வாணமாக்கி பலதரப்பட்ட சித்திரவதைகளை இராணுவத்தினர் என் மீது மேற்கொண்டனர்.

இவ்வாறு பலாலி இராணுவ முகாமில் இருபத்தைந்து மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டு நேற்று விடுவிக்கப்பட்ட வல்வெட்டித்துறையைச் சேர்ந்த குடும்பஸ்தரான மகாலிங்கம் லக்ஷ்மிகாந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நானும் இரண்டு நண்பர்களுமாக 22.2.91 இல் இந்தியாவில் இருந்து வந்து கொண்டிருந்த வேளையில் பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பலாலி முகாமுக்கு கூட்டி செல்லப்பட்டோம். அங்கே விசாரணைகள மேற்கொண்ட பின்னர் குணசேகரம் என்பவர் மேல் விசாரணைக்காக களுத்துறைக்கு அனுப்பப்பட்டார். மற்றையரின் நிலை விடுவிக்கப்படும்வரை அவர் பற்றிய தகவல்கள் எதுவும் தெரியவில்லை

நான் கைது செய்யப்பட்டு முதல் வருடகாலப் பகுதியில் தாக்குதல்களுக்கு மேல் தாக்குதல்களும், சித்திரவதைக்கு மேல் சித்திரவதையும் தாங்க முடியாத அளவில் இடம் பெற்றது. எனது உடலில் இராணுவத்தினரின் தாக்குதல் படாத உறுப்புகள் எதுவுமில்லை. இராணுவக் கெடுபிடியான காலங்களில் எமக்கு பசியாற உணவு தரப்படுவதில்லை. நாளொன்றுக்கு ஒரு கப் சோறு மட்டுமே கிடைக்கும் பசி எடுக்கும் நேரங்களில் தண்ணீர் குடிப்பதானாலும் இராணுவத்தினரிடம் அனுமதி பெறவேண்டும்.

கைது செய்யப்பட்டு ஒரு வருடகாலத்திற்குப் பின்னர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் எம்மைப் பொறுப்பேற்றதன் பின்னரே எமக்கு பசியாற உணவும், உடையும் கடிதத் தொடர்பும், கிடைத்ததோடு இராணுவத் தாக்குதலும் குறைந்தது. தமிழர்களை சித்திரவதை செய்து இம்சித்து அடிமையாக வைத்திருப்பது சிங்கள இராணுவத்திற்கு ஒரு வகையான இன்பம் என்றார்.

இளவாலைப் பகுதியில் இருந்து விடுவிக்கப்பட்ட புற்றுநோயாளியான திருமதி செல்லம்மா - மார்க்கண்டு [வயது 46] தெரிவிக்கும் போது, இளவாலையில் இராணுவ நடவடிக்கை ஆரம்பித்த வேளை எனது கணவனும் மகனும், யாழ்ப்பாணம் சென்றிருந்தனர். கடந்த நான்கு மாதங்களாக குடும்பத்தினரின் உதவிகள் இல்லாமல் புற்றுநோயினால் பெரிதும் அவஸ்தைப்பட்டேன்.

எனக்கு ஏற்பட்டிருக்கும் நோயை குணப்படுத்துவதற்கு யாழ்ப்பாணம் செல்ல நான் பல தடவைகள் அனுமதி கேட்டும் தர மறுத்ததாலேயே இந்நோய் மேலும் தீவிரமாயிற்று. இந் நோய்க்குரிய மருந்து வகைகள் கிடைக்காததல் எனது கண் பார்வையும் மறையும் நிலை ஏற்பட்டது.

நான் மட்டுமல்ல, அளவெட்டி, பன்னாலை, மாதகல் பகுதியில் தங்கியிருப்போர் அனைவரும் பல்வேறு வகையிலான நோயாளிகளாக மாறி வருகின்றனர். மிகுதியானோரும் விரைவில் வந்து சேராவிடில் நோயினால் இறக்க நேரிடும் என்றார்.

இராணுவத்தினரின் தொந்தரவுகள் உங்களுக்கு ஏற்படுவதுண்டா என்று செய்தியாளர் கேட்டதற்கு அதை எப்படிக் கூறுவது என்று வாயைப் பொத்திக்கொண்டார். [யோ]

## தமிழ் இளைஞர் கடத்தல் ஈ.பி.டி.பி யினர் மீது வழக்கு

[கொழும்பு]

தர்மலிங்கம் செல்வகுமார் (வயது 25) என்பவர் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர் தன்னைக் கடந்த ஜனவரி முதலாம் திகதியன்று கடத்திச் சென்று ஒரு கோடி ரூபா தரும்படி மிரட்டியதாகக் கூறும் புகார் ஒன்றை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

சட்டத்தரணி நெய்ஸ் ராஜ கருணா மூலமாக தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம் மனுவில் அவர் மேலும் குறிப்பிடுகையில்: ஆயுத பாணிகளான ஆறு பேர் தன்னைக் கடத்திச் சென்றதாகவும், தனது நண்பர்களுடன் புது வருடத்தை ஒருஸ்போட்ஸ் கிளப்பில் களித்துக் கொண்டிருந்த போது இக்கடத்தல் இடம் பெற்றதாக தங்குமிடத்தின் பின்புறத்தில் வெவ்வேறான கூண்டுகளில் சிங்களவர்கள், தமிழர்கள் எனப்பலர் அடைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். தன்னிடமிருந்த நகைகள் உட்பட சுமார் 45,000 ரூபா பெறுமதியான பொருள்களைக் கொடுத்து தான் தப்பித்துக் கொண்டதாகவும், ஆனால் தேவானந்தாவின் சகாக்களான சந்திரகுமார் அல்லது அசோக், சிவகுரு பாலன் அல்லது ஜீவன் என்னும் இருவரும் சென்னையிலிருக்கும் தமது தாயாரிடம் ஒரு கோடி ரூபா கேட்டு மிரட்டியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.



## கனகரட்ணம் ஜெகரூபி
(ஆத்தை)

தாயின் மடியில்:
04-11-1980

தனிமையில் சென்றது:
24-01-1993

நாட்களோ! மெல்ல நகர்ந்தது
நாற்பத்தைந்து நாள் - ஆனாலும்
நாம் அடையோம் ஆறுதல் - இங்கு
நலிந்துமே என்றும் வாடுகின்றோம்
கயல் விழிக் கண்தான் - எங்கே!
கட்டழகு உடல்தான் - எங்கே!
சிரித்திடும் செவ்வாய் - எங்கே
சினத்திடா மனம் தான் - எங்கே
மலர் பறித்திடும் கைதான் - எங்கே!
மழலை பேசும் குரல்தான் - எங்கே!
குதித்தோடும் கால்தான் - எங்கே!
கும்பிடும் விநாயகன்தான் - எங்கே!
ஆத்தை, ஆத்தை என அழைத்திடும்
- நாள் தான் எங்கே!
ஆலயத்தில் ஆற்றிய அரும்பணிதான் எங்கே
தோளில் சுமந்து அப்பா - உன்னை
தேற்றிய நாள் தான் - எங்கே!
மார்பிலே அணைத்து அம்மா - உன்னை
மகிழ்ந்திட்ட நேரம் தான் - எங்கே!
கனடா அக்காமார் - உன்னை
கண்டிடும் காலம் தான் - எங்கே!
பாதிவழி வந்து அம்மா - என்னை
பயணம் அனுப்பி வைத்த - உன்னை
கட்டை அடுக்கி நெருப்பை - மூட்டி
காணும் இந்த நிலையிலே - வீடியோ
படத்தில் வந்து பார்க்கவா - ஐயோ!
பாவிநான் பதை பதைக்க வந்தேனே!
இக்கரையும் சேரவில்லை - உன்
இன்முகமும் நான் காணவில்லை
அக்கரையில் நின்று நான்
அலைந்தேனே! அன்னியன் போல்
ஆறாது, ஆறாது ஆத்தை - உன்பிரிவு
தீராது, தீராது திடமாக நாம் - இனி
வாழ்வதில்லை.

பிஞ்சு மழலையின் பிரிவுத்துயரால் எந்நேரமும்
துவண்டிடும்-

605/1,
கே.கே.எஸ்.றோட்,
யாழ்ப்பாணம்.
[4427]

அன்பு அப்பா, அம்மா, அக்கா
மார், அண்ணாமார், அத்தான்
மார், பெறாமக்கள், பெரியம்மா
அன்ரி, மாமாமார், மாமிமார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

றிய மாணவர்கள் அனைவரும் பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியைப் பெற்று உள்ளனர். (மு)

### யாழ்-வன்னி

என்பதுபற்றிய ஆலோசனைகளையும் மக்கள் மத்தியிலிருந்து போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு வேண்டி நிற்கிறது. அபிப்பிராயங்களையும் ஆலோசனைகளையும் எழுதி நேரிலோ, தபாலிலோ, ஈழநாதம் பணிமனைக்கோ, அல்லது போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் அபிப்பிராயப் பெட்டிகள் மூலமோ கூடிய விரைவில் கிடைக்கச் செய்யும்படி போக்குவரத்து கண்காணிப்பு பிரிவினர் கேட்டுள்ளனர்.

ளார்

வலிகாமம், வடமராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு காலை 11.00 மணி முதல் 12.00 மணிவரை நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயம்

தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு பிற்பகல் 2.00 மணி தொடக்கம் 3.00 மணி வரை கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம் பிற்பகல் 3.30 மணி தொடக்கம் 4.30 மணிவரை சாவகச்சேரி இந்துக்கல்லூரி

தென்மராட்சி பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு பிற்பகல் 5.00 மணி தொடக்கம் 6.00 மணி வரை கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்.


## யாழ். தமிழ்த்தாய் புத்தகசாலையில்

இதோ!
அடுத்த தொகுதி புத்தகங்கள்
விற்பனைக்கு வந்துவிட்டன
அத்துடன்-
உங்களுக்குத் தேவையான அப்பியாசக் கொப்பிகள் மற்றும் வாழ்த்து அட்டைகள், பாடசாலை உபகரணங்கள் போன்றவற்றையும் சில்லறையாகப் பெற்றுக்கொள்ளலாம்.

இன்றே வாருங்கள்!
குறைந்த விலை! நிறைந்த சேவை!!

## தமிழ்த்தாய் புத்தகசாலை
191, மின்சாரநிலைய வீதி,
[யாழ். பஸ்நிலைய அருகில்]
யாழ்ப்பாணம்.

(சி-6165)


உ

இந்து சமயப் பேரவை - யாழ்ப்பாணம்
கைதடி - சைவச் சிறுவர் இல்லம்

## கொடி தினம் 10-03-1993

இந்து சமயப் பேரவை பெற்றெடுத்த குழந்தை சைவச் சிறுவர் இல்லம். இந்தக் குழந்தையை வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு மக்கள் எல்லோரையும் சார்ந்தது. ஆகவே,

நிதி மிகுத்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
அதுவுமற்றவர் வாய்ச்சொல் அருளீர்.

உங்கள் ஒத்துழைப்பும் பரோபகாரமும் சைவச் சிறுவர் இல்லத்திற்கு மூலதனமாகும். ஆகவே உங்கள் பேராதரவை நாடுகிறோம்:

சிறியோரை மேம்படச் செய்தால் - பின்பு
தெய்வம் எல்லோரையும் வாழ்த்தும்.

நா. முத்தையா
தலைவர்

சி. நாகராஜா
பொருளாளர்

சி. சக்திகிரீவன்
செயலாளர்

(4434)

## தமிழ் இளைஞர் கடத்தல்
## ஈ.பி.டி.பி யினர் மீது வழக்கு

[கொழும்பு]

தர்மலிங்கம் செல்வகுமார் (வயது 25) என்பவர் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர் தன்னைக் கடந்த ஜனவரி முதலாம் திகதியன்று கடத்திச் சென்று ஒரு கோடி ரூபா தரும்படி மிரட்டியதாகக் கூறும் புகார் ஒன்றை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

சட்டத்தரணி நெய்ஸ் ராஜகருணா மூலமாக தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம் மனுவில் அவர் மேலும் குறிப்பிடுகையில்: ஆயுத பாணிகளான ஆறு பேர் தன்னைக் கடத்திச் சென்றதாகவும், தனது நண்பர்களுடன் புது வருடத்தை ஒருஸ்போட்ஸ் கிளப்பில் களித்துக் கொண்டிருந்த போது இக் கடத்தல் இடம் பெற்றதாகவும், தன்னைக் கடத்திச் சென்ற வாகனத்தில் அக்கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவும் உடனிருந்ததாகவும் வெள்ளவத்தையில் இருக்கும் பார்க்றோட் 121ஆம் இலக்க வீட்டிற்கு தான் கூட்டிச்செல்லப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்

தேவானந்தாவின் இந்தத் தங்குமிடத்தின் பின்புறத்தில் வெவ்வேறான கூண்டுகளில் சிங்களவர்கள், தமிழர்கள் எனப்பலர் அடைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுவதாகவும் அவர்தெரிவித்துள்ளார். தன்னிடமிருந்த நகைகள் உட்பட சுமார் 45,000 ரூபா பெறுமதியான பொருள்களைக் கொடுத்து தான் தப்பித்துக் கொண்டதாகவும், ஆனால் தேவானந்தாவின் சகாக்களான சந்திரகுமார் அல்லது அசோக், சிவகுருபாலன் அல்லது ஜீவன் என்னும் இருவரும் சென்னையிலிருக்கும் தமது தாயாரிடம் ஒரு கோடி ரூபா கேட்டு மிரட்டியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

### மகளிர்

பேரணி பல்கலைக் கழகத்தை அடைந்தது. அங்கு அணிவகுப்பு ஏற்பு வைபவத்தில் மகளிர் படையணி சிறப்புத் தளபதி செல்வி ஜெனா தமிழீழ தேசியக்கொடியை ஏற்றி வைத்து அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

விடுதலைப்புலிகள் மகளிர் படையணி தளபதி செல்வி விதுஷா, துணைத் தளபதி செல்வி ஜெனி, கடற்புலிகள் மகளிர் படைபிரிவு பொறுப்பாளர் செல்வி நளாயினி, விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி ஜெயா ஆகியோரும் அணிவகுப்பு மரியாதை ஏற்பு வைபவத்தில் கலந்து கொண்டனர்.

இதைத்தொடர்ந்து பொதுக் கூட்டம் மகளிர் அமைப்பின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் தணிகைசெல்வி தலைமையில் ஆரம்பமானது.

### வீரச்சாவு

திலீபன் [வயது 21, சாஸ்திரி கூளாங்குளம், வவுனியா] ஆகிய இருவருமே வீரச்சாவு அடைந்தவர்களாவர்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### அமெரிக்க

ருக்கிறது. எனினும் நெடுமாறன் சார்பாக ஆஜராகும் சட்டத்தரணி துரைசாமிக்கு அமெரிக்க வழக்கறிஞர் உதவி புரியலாம் என்று நீதிமன்றம் கூறியுள்ளது.

யாழ்ப்பாணம் செல்ல நான் பல தடவைகள் அனுமதி கேட்டும் தர மறுத்ததாலேயே இந் நோய் மேலும் தீவிரமாயிற்று. இந் நோய்க்குரிய மருந்து வகைகள் கிடைக்காதல் எனது கண் பார்வையும் மறையும் நிலை ஏற்பட்டது.

நான் மட்டுமல்ல, அளவெட்டி, பன்னாலை, மாதகல் பகுதியில் தங்கியிருப்போர் அனைவரும் பல்வேறு வகையிலான நோயாளிகளாக மாறி வருகின்றனர். மிகுதியானோரும் விரைவில் வந்து சேராவிடில் நோயினால் இறக்க நேரிடும் என்றார்.

இராணுவத்தினரின் தொந்தரவுகள் உங்களுக்கு ஏற்படுவதுண்டா என்று செய்தியாளர் கேட்டதற்கு அதை எப்படிக் கூறுவது என்று வாயைப் பொத்திக்கொண்டார்.

[யோ]

## மரண அறிவித்தல்



## அருணாசலம் சபாபதிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபரும், நாவலர் வழித் தோன்றலும், முன்னாள் நாவலப்பிட்டி இந்து வாலிபர் சங்கத் தலைவரும்.)

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த அருணாசலம் சபாபதிப்பிள்ளை 8-03-93 அன்று காலமாகிவிட்டார்.

இவர் லீலாவதியின் அன்புக் கணவரும், தையல்நாயகி (ஜேர்மனி), இலங்கைநாயகி (கூட்டுறவுப் பரிசோதகர்), செல்வநாயகி (ஜேர்மனி), லோகநாயகி (ஆசிரியை இரத்தினபுரி), கமலாதேவி (கொழும்பு), உமாகரன் (கனடா), உமாதேவி (ஈழநாதம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கேசவன் (ஜேர்மனி), இந்திரகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், மதனகாந்தி, கஜன், ஜிந்துஜா, ஜிந்துஷன், சதீஷாந் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 09-03-93 செவ்வாய்க்கிழமை (இன்று) பி. ப. 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று கோப்பாய் மயானத்தில் தகனக் கிரியைகள் இடம்பெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

[சி/6164]

தகவல்
உமா